# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## ANNUAL EXAMINATION ( 2017-2018 )

**CLASS : VIII**

| | | |
|---|---|---|
| Maximum Marks : 80 | **TAMIL** | Time : 3 hours |
| மதிப்பெண்கள் : 80 | | நேரம் - 3 மணி |

# தமிழ்

The question paper is divided into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 10 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 10 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 15 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 6 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி – I

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேர மரபினர். இளங்கோவடிகள் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை.இவரது தமையன் சேரன் செங்குட்டுவன். " இளையவரான இளங்கோவே நாடாள்வார் " என்று கணியன் கூறியக் கருத்தைப் பொய்ப்பிக்கும் பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார். இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர். இவர் சமய வேறுபாடற்ற துறவி. இவருடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. இளங்கோவடிகள் சிறப்புணர்ந்த பாரதி யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை எனப் புகழ்கிறார்.

வினாக்கள் 5 x 1 = 5

1. இளையவரான இளங்கோவே நாடாள்வார் எனக் கூறியவர் யார் ?

அ ) இளங்கோவின் தந்தையார் இ ) கணியன்

ஆ) இளங்கோவின் தமையன் ஈ ) நாட்டு மக்கள்

2. இளங்கோ வாழ்ந்த காலம் யாது ?

அ ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு இ ) கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

ஆ) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு ஈ ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

3. இளங்கோவடிகள் எந்த மரபைச் சார்ந்தவர் ?

அ ) சோழ மரபினர் இ ) பாண்டிய மரபினர்

ஆ) சேர மரபினர் ஈ ) மங்கோலிய மரபினர்

4. இளங்கோ துறவு பூண்டு தங்கிய இடம் எது ?

அ ) கோட்டை வாசல் இ ) கோட்டையம்பலம்

ஆ) மலைக்கோட்டை ஈ ) குணவாயிற்கோட்டம்

5. நற்சோணை யார் ?

அ ) சேரன் செங்குட்டுவனின் தமக்கை இ ) இளங்கோவின் ஆசிரியர்

ஆ) இளங்கோவின் தங்கை ஈ ) இளங்கோவின் தாயார்

2 ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலத்துள் முதலிடம் வகிப்பது மலை. மானிடத் தோற்றமே மலையிடம் தோன்றிற்று என்று நவில்கின்றார் நிலநூலார். அதனால் தான் குறிஞ்சி என்று பெயர் சூட்டி முதலிடம் அளித்தார்கள் தமிழ்ப்புலவர்கள். குறிஞ்சிக் கிழவன் என்று போற்றப்படும் தமிழ்க்கடவுள் முருகனின் உறைவிடமும் மலை தான். முக்கண்ணன் சிவபெருமானின் உறைவிடமும் மலை தான். இதனால் தான் அவனுக்கு மலையரசன் என்று பெயர். காத்தல் கடவுள் திருமாலும் மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்துக் கோகுலத்தைக் காத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.குறிஞ்சி நில மக்கள் குறவர், குறத்தியர் ஆவர். வேட்டையாடுதல், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் ஆகியன குறிஞ்சி நில மக்களின் தொழிலாகும்.

வினாக்கள் 5 x 1 = 5

1. ஐவகை நிலங்கள் எவை ?
2. குறிஞ்சிக்கிழவன் என்று போற்றப்படுபவர் யார் ?
3. குறிஞ்சி நில மக்கள் யார் ?
4. குறிஞ்சி நில மக்களின் தொழில்கள் எவை ?
5. மலையரசன் யார் ?

## பகுதி – II

3 ) கடிதம் எழுதுக. 1 x 7 = 7

வெற்றி பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

4 ) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் கட்டுரை எழுதுக.

1. சுற்றுபுறச் சூழலைப் பாதுகாப்போம் 1 x 8 = 8
2. தேனீக்கள்
3. காந்தியடிகள்

## பகுதி - III

5 ) சான்று தருக. 3 x 1 = 3

1. தோன்றல் விகாரம்

அ) பனைமரம் இ) பொன்வளையல்
ஆ) பலாச்சுளை ஈ ) கற்சிலை

2. மெய் முன் உயிர்

அ) இடை + அழகு இ) கிளி + மூக்கு
ஆ) மண் + அகல் ஈ ) மரம் + கிளை

2. சினையாகு பெயர்

அ) பாலை இறக்கு இ) ஊர் மக்கள் சிரித்தனர்
ஆ) வெற்றிலை நட்டான் ஈ) தொழிலாகு பெயர்

6 ) நிரப்புக. 3 x 1 = 3

1. பண்பாகுபெயரின் மறுபெயர் ________.

அ) காலவாகு பெயர் இ) குணவாகுபெயர்
ஆ) சினையாகு பெயா ஈ) தொழிலாகு பெயர்

2. இரண்டு அலல்து பல சீர்கள் சேர்ந்து அமைவது __________ எனப்படும்.

அ) சீர் இ) அடி
ஆ) தளை ஈ) தொடை

3. பசுமை + கூழ் = ______________.

அ) பசுங்கூழ் இ) பைங்கூழ்
ஆ) பசுமைகூழ் ஈ) பசுமைக்கூழ்

7 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. **3 x 1 = 3**

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.** **( இடம்பெற்ற அணி எது ? )**

அ) உவமை அணி இ) உருவக அணி
ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி ஈ) இல்பொருள் உவமை அணி

2. **தலைக்கு ஒரு மாம்பழம் கொடு ( ஆகுபெயர் நீக்கி எழுதுக )**

அ) தலைக்கு கொடு
ஆ) மாம்பழம் கொடு
இ) ஒரு மாம்பழத்தை அனைவருக்கும் கொடு
ஈ) ஒருவனுக்கு ஒரு மாம்பழம் என அனைவருக்கும் கொடு

3. **தேவாரம் ( இடம்பெற்ற உடம்படுமெய் எது ? )**

அ) த் இ) ல்
ஆ) வ் ஈ) ம்

8 ) **இலக்கணக்குறிப்பு தருக.** **3 x 1 = 3**

1. **மலர்மாலை**

அ) இயல்புப் புணர்ச்சி இ) விகாரப் புணர்ச்சி
ஆ) கெடுதல் விகாரப் புணர்ச்சி ஈ ) தோன்றல் விகாரப் புணர்ச்சி

2. **சித்திரை வந்தாள்**

அ) சினையாகு பெயர் இ) தொழிலாகு பெயர்
அ) காலவாகு பெயர் ஈ ) இடவாகுபெயர்

3. படக்காட்சி

அ) தோன்றல் விகாரம் இ) கெடுதல் விகாரம்
அ) திரிதல் விகாரம் ஈ ) இயல்புப் புணர்ச்சி

9 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

1 ) அ) அணியிலக்கணம் குறித்த தமிழ்நூல் சிலப்பதிகாரம்.
ஆ ) அணியிலக்கணம் குறித்த தமிழ்நூல் கந்தரலங்காரம்
இ ) அணியிலக்கணம் குறித்த தமிழ்நூல் தண்டியலங்காரம்.
ஈ ) அணியிலக்கணம் குறித்த தமிழ்நூல் சிகையலங்காரம்.

2 ) அ) தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
ஆ ) தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.
இ ) தமிழ் இலக்கணம் எட்டு வகைப்படும்.
ஈ ) தமிழ் இலக்கணம் நான்கு வகைப்படும்.

2 ) அ) வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என தளை நான்கு வகைப்படும்.

ஆ ) வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என அசை நான்கு வகைப்படும்.

இ ) வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என சீர் நான்கு வகைப்படும்.

ஈ ) வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என பா நான்கு வகைப்படும்.

## பகுதி - III

**10 ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **5 x 1 = 5**

**1. களைப்பு நீங்க வேலை செய்வோர் பாடுவது ____________ .**

அ) விளையாட்டுப் பாடல்கள் இ) வழிபாட்டுப் பாடல்களள

அ) ஒப்பாரிப் பாடல்களள ஈ ) தொழில் பாடல்கள்

**2. திருக்குறள் ___________ நூல்களுள் ஒன்று.**

அ) பதினெண்கீழ்க்கணககு இ) பதினெண்மேல்கணக்கு

அ) எட்டுத்தொகை ஈ ) பத்துப்பாட்டு

**3. குற்றாலத்தில் உள்ள மலையின் பெயர் _____________.**

அ) வேங்கடம் இ) திரிகூடம்

அ) ஆனைமலை ஈ ) நம்பி மலை

**4. கும்பகோணத்திற்குத் தென்புறம் ______________ பாய்கிறது.**

அ) அரிசிலாறு இ) காவிரியாறு

அ) பாலாறு ஈ ) வைகையாறு

**5. உ..வே.சா. வின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர் ______________.**

அ) கொன்றை வேந்தன் இ) என் சரிதம்

அ) பொன்னியின் செல்வன் ஈ ) தவப்புதல்வன்

**11 ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.** **5 x 2 = 10**

**1. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் பொருள் தருக.**

i) காயசித்தி ii) ஆவணம் iii) உரி

**2. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் எதிர்ச்சொல் தருக.**

i) அறம் ii) பிழையானது iii) நாட்டுப்புறம்

**3. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் பிரித்து எழுதுக.**

i) செங்கதிரோன் ii) புறநானூறு iii) அருந்தமிழ்

**4. ஏதேனும் இரண்டிற்கு மட்டும் சேர்த்து எழுதுக.**

i) எழுத்து + ஆணி ii) ஆர்வம் + உடைமை iii) பூ + புனல்

5. பொருத்துக.

| | |
|---|---|
| ஆரியநாடு | - கபிலர் |
| தீம்தரிகிட | - திருக்குற்றாலநாதர் |
| குறிஞ்சிப்பாட்டு | - தஞ்சாவூர் |
| சரஸ்வதி மகால் | - மத்தளம் |

**12 ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **3 x 3 = 9**

1. உ.வே.சா. அவர்களைத் தமிழ் தாத்தா என்று வழங்கக் காரணம் என்ன ?
2. புறநானூற்றைத் தமிழ்க்கருவூலம் என்பது ஏன் ?
3. திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் பாடப்படும் பாடல் எது ?
4. சோழ மண்டலத்தில் எக்கருவிகளின் ஒலியைக் கேட்கலாம் ?
5. அன்பில்லாத வாழ்க்கை தளிர்க்காது - எதனைப் போல ?

**13 ) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடை தருக.** **1 x 5 = 5**

1. அன்புடையவரின் சிறப்புகள் யாவை ?
2. தென்னாரிய நாட்டின் சிறப்புகளைக் குறத்தி எவ்வாறு கூறுகிறாள் ?
3. குறிஞ்சிப்பாட்டு நூலைப் புதுப்பிக்க உ.வே.சா மேற்கொண்ட முயற்சி என்ன ?

**14 ) அடிபிறழாமல் எழுதுக.** **1 x 4 = 4**

**வானரங்கள்** - எனத் தொடங்கி **விளைப்பார்** என முடியும் குற்றாலக் குறவஞ்சி பாடலை எழுதுக.

**( அல்லது )**

i) சிறப்பு - என முடியும் திருக்குறள்

ii) அன்பிலார் - எனத் தொடங்கும் திருக்குறள்

**15 ) பின்வரும் தலைப்பின் கீழ் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **1 x 7 = 7**

தங்க மாம்பழமும் சூட்டுக்கோலும்

**( அல்லது )**

**பின்வரும் வரிகளைத் தொடர்ந்து சொந்த நடையில் கதை எழுதுக.**

ஊரின் பக்கத்தில் ஒரு மரம். அது நன்கு தழைத்து வளர்ந்திருந்தது. பூப் பூத்துக் காய்த்துக் குலுங்கியது. போவோர் வருவோர் அதன் நிழலில் தங்கி இளைப்பாறினர். அதில் பலவகைப் பறவைகளும் கூடு கட்டி வாழ்ந்திருந்தன. மரம் வெட்டுபவன் ஒருவன் அம்மரத்தைை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது ......,